# பெரம்பலூர் நகராட்சி

**2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 25– ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரண நகர்மன்ற கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை : நகர் மன்ற தலைவர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| **25.06.2026** | **பொருள் 01 :-** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை அருகில் உள்ள அம்மா உணவகத்தில் பராமரிப்பு செய்யும் பணிக்கு ரூ. 3.15 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1130 அனுமதிக்கப்பட்டது |
| **25.06.2026** | **பொருள் 02 :-** பெரம்பலூர் நகராட்சியில் பாதாள சாக்கடை பணிக்காக Jet Rodding வாகனத்தில் பயன்படுத்தப்படும் 1" BSP 25 mm Hose 60 மீட்டர் நீளத்திற்கு விநியோகம் செய்யும் பணிக்கு ரூ. 2.50 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1131 அனுமதிக்கப்பட்டது |
| **25.06.2026** | **பொருள் 03 :-** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட தினசரி மார்க்கெட்டில் காய்கறிகள் மற்றும் பொருட்களை ஏற்றி இறக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு ஓய்வறை அமைக்கும் பணிக்கு ரூ.12.75 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1132 அனுமதிக்கப்பட்டது |
| **25.06.2026** | **பொருள் 04 :-** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் தெரு அரணாரை பகுதியில் தார் சாலை அமைக்க உள்ளதால் அந்த சாலையில் உள்ள கால்வாய், சாலையின் மட்டத்தை விட தாழ்வாகவும் மற்றும் பல இடங்களில் பழுதடைந்து உள்ளதால் கால்வாயினை சரி செய்யும் பணிக்கு ரூ. 3.50 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1133 அனுமதிக்கப்பட்டது |
| **25.06.2026** | **பொருள் 05 :-** பெரம்பலூர் நகராட்சி புதிய அலுவலக பின்புறத்தில் காலியாக உள்ள இடத்தில், பொது சுகாதார பிரிவில் இயக்கப்பட்டு வரும் மின்கல மற்றும் பிற வாகனங்களை நிறுத்தவதற்கு இரும்பு கூரை அமைக்கும் பணிக்கு ரூ. 13.50 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1134 அனுமதிக்கப்பட்டது |
| **25.06.2026** | **பொருள் 06 :-** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட சங்குபேட்டையில் உள்ள மாரியம்மன் கோயில் தெருவின் கீழ்புறம் மழைநீர் கால்வாய் முற்றிலும் பழுதடைந்து இருப்பதால் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ. 20.00 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1135 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **25.06.2026** | **பொருள் 07 :-** பெரம்பலூர் நகராட்சியில் பழைய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள தினசரி காய்கறி அங்காடி தெருவுக்கு காமராஜர் வளைவு பகுதி வழியாக செல்லும் அணுகு சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதாலும், மார்கெட் தென்புறம் சாலை முதல் காமராஜர் வளைவு பகுதி வரை உள்ள சாலையினை பேவர் பிளாக் சாலையாக மாற்றும் பணிக்கு ரூ. 2.70 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மே ற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண். /2026/இ | தீர்மான எண். 1136 அனுமதிக்க ப்பட்டது |
| **25.06.2026** | **பொருள் 08 :-** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட எளம்பலூர் சாலையில் உள்ள ஆவின் பாலகம் அமைந்துள்ள பகுதியில் இருந்து காமராஜர் வளைவு வரை கீழ்புறம் உள்ள கால்வாய் மிகவும் பழுதடைந்து உள்ளதால் அவற்றை புதியதாக அமைக்கும் பணிக்கு ரூ. **28.50** இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண். /2026/இ | தீர்மான எண். 1137 அனுமதிக்க ப்பட்டது |
| **25.06.2026** | **பொருள் 09** :- பெரம்பலூர் நகராட்சியில் உள்ள புதிய பேருந்து நிலையத்தின் தெற்கு சாலையில் விரிவாக்க பேருந்து நிலையத்தின் உள் செல்லும் மற்றும் வெளியேறும் வழிதடங்கள் மற்றும் இருசக்கர வாகன நிறுத்த இடத்தின் பிரதான வழி போன்றவை உள்ளதால் பேருந்து நிலைய வளாகத்திற்குள் கட்சி கூட்டங்கள் கண்டன ஆர்பாட்டங்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் நடத்துவதால் பொது மக்களுக்கும் பேருந்துகள் வந்து செல்வதற்கும் பெரும் தொந்தரவாக இருப்பதால் இனி வரும் காலங்களில் காவல் துறை அனுமதி வழங்காமல் இருக்க மாவட்ட ஆட்சித்தலைவர் வழியாக காவல் துறைக்கு உத்தரவு வழங்க வேண்டி மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1138 அனுமதிக்க ப்பட்டது |
| **25.06.2026** | **பொருள் 10** :- பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 ல் உள்ள நடுத்தெரு சாலையில் குறுக்கே உள்ள சிறுபாலம் பழுதடைந்து உள்ளதால் புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.1.80 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண். /2026/இ | தீர்மான எண். 1139 அனுமதிக்க ப்பட்டது |
| **25.06.2026** | **பொருள் 11** :- பெரம்பலூர் நகராட்சி அலுவலகம் , அலுவலகம் பின்புறம் உள்ள அறிவுசார்மையம் , புதிய மற்றும் பழைய பேருந்து நிலையங்கள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் உள்ள மின்விளக்குகள் மற்றும் மின் விசிறிகளின் பழுதுகளை பழுது நீக்கம் செய்ய காலதாமதம் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு மற்றும் தேவைக்கேற்ப புதியதாக எலக்ட்ரிக் பொருட்கள் வாங்கும் பணிக்கு ரூ.2.00 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1140 அனுமதிக்க ப்பட்டது |
| **25.06.2026** | **பொருள் 12** :- பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான செங்குணம் திறந்த வெளி கிணறு 2 எண்ணிக்கை , உப்பு ஒடை திறந்தவெளி கிணறு 2 எண்ணிக்கை மற்றும் சித்தர் கோயில் அருகே உள்ள திறந்தவெளி கிணறு ஆகியவற்றில் சர்வீஸ் ஒயர்கள் , பேனல் போர்டுகள் பழுதடைந்துள்ளதால் அவற்றை சரி செய்யும் பணிக்கு ரூ .2.00 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1141 அனுமதிக்க ப்பட்டது |

| | | |
|---|---|---|
| 25.06.2026 | **பொருள் 13** :- பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட சாலைகளில் உள்ள ஆள் இறங்கும் தொட்டியில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரி செய்யவும் , புதியதாக அமைக்கப்பட்ட சாலைகளில் உள்ள ஆள் இறங்கும் தொட்டிகளை சாலையின் மட்டத்திற்கு உயர்த்தும் பணிக்கு ரூ. 7.00 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1142 அனுமதிக்கப்பட்டது |
| 25.06.2026 | **பொருள் 14** :- பெரம்பலூர் நகராட்சியில் பல்வேறு பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார்கள் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் புதியதாக 1.5 HP மோட்டார்கள் 10 எண்ணிக்கையில் வாங்கும் பணிக்கு ரூ.6.00 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1143 அனுமதிக்கப்பட்டது |
| 25.06.2026 | **பொருள் 15** :- பெரம்பலூர் நகராட்சி பொதுபிரிவு , மேலாளர் அறை, சுகாதார பிரிவு மற்றும் கணிணி அறைகளில் 15 எண்ணிக்கையில் கணிணி பயன்படுத்தப்பட்டு வருகிறது. மின்சார துண்டிப்பு ஏற்படும் பட்சத்தில் கணிணி உபகரணங்கள் பழுதுகள் ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு 5 கிலோவாட் UPS மற்றும் இணைப்பு பணிகளுக்கு ரூ.2.75 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1144 அனுமதிக்கப்பட்டது |
| 25.06.2026 | **பொருள் 16** :- பெரம்பலூர் நகராட்சி வடக்கு மாதவி சாலை பகுதி மேட்டுதெரு ராஜா மருத்துவமனை முதல் ஆத்தூர் சாலை சந்திப்பு வரை கிழக்கு பகுதியில் மழை நீர் வடிகால் பழுதடைந்து இருப்பதால் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.17.00 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1145 அனுமதிக்கப்பட்டது |
| 25.06.2026 | **பொருள் 17** :- பெரம்பலூர் மாவட்ட நகர்ஊரமைப்பு துணை இயக்குநர், அவர்களின் ந.க.எண். CD61NKRP/57071/2025/PD/2025/TCP–பெ.மா எண்ணுடைய **02.12.2025**–ம் தேதிய செயல்முறைகள் மற்றும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்.**106/2025** என எண்ணிடப்பட்ட ஆணையின் மூலம் பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் வடக்கு கிராம புல சர்வே எண்–**210/4A2**–ல் **1.79** ஏக்கர் (7270.00 ச.மீ ) நிலத்தில் உள்ள மனைப்பிரிவு மற்றும் அதற்கான வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை, பூங்கா, பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மானம் செய்வதற்குண்டான பகுதியினை திரு. N.செந்தில்குமார் த/பெ நாகரத்தினம், நகராட்சி ஆணையர் பெயருக்கு தான செட்டில் மெண்ட் பத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவண நகலையும் இணைத்து அனுப்பியுள்ளனர். மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை வசதி ,மழைநீர் வடிகால் அமைப்பு மற்றும் தெருவிளக்கு போன்ற வசதிகளை மேற்கொள்ள உரிய கட்டணங்களை வசூலித்திடவும், உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடத்தினை உட்பிரிவு செய்து வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்தும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி மனைப்பிரிவிற்கு கூராய்வு கட்டணமாக ரூ.**1000/–** மற்றும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% நிலப்பயன் மாற்றக்கட்டணம், மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகளான சாலை அமைப்பு, மழைநீர் வடிகால், தெருவிளக்கு அமைத்தல் குடிநீர், பாதாளசாக்கடை, பூங்கா மற்றும் திறவிடங்களுக்கு வேலி அமைத்தல் தொடர்பான பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து அதற்கான தொகை ஆகியவற்றை வசூல்செய்து கொண்டும் தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பெரம்பலூர் | தீர்மான எண். 1146 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>25.06.2026</td>
<td>நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடத்தினை பெரம்பலூர் நகராட்சி ஆணையர் என்ற பெயரில் பட்டா மாற்றம் செய்தும் பெரம்பலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் ந.க.எண். CD61NKRP/57071/2025/PD/2025/TCP–பெ.மா எண்ணுடைய 02.12.2025–ம் தேதிய கடிதம் மற்றும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்.106/2025 –ன் மூலம் வழங்கப்பட்ட ஆணைகளின்படி பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் வடக்கு கிராம புல சர்வே எண்–210/4A2–ல் 1.79 ஏக்கர் (7270.00 ச.மீ ) நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு மற்றும் வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்1183/2026/எப்1</td>
<td></td>
</tr>
<tr>
<td>25.06.2026</td>
<td>பொருள் 18 :- இந்நகராட்சியின் 15 வது நிதிக்குழு மானியம் (15 CFC UN TIED GRANT) 2025 - 2026 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படியான பணிகளுக்கு 11.03.2026 ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td colspan="5">15 CFC UN TIED GRANT – 2025 - 2026</td></tr>
<tr><th>வ.எண்</th><th>பணியின் விவரம்</th><th>மதிப்பீடு தொகை (இலட்சம்)</th><th>வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">இந்நகராட்சிக்குட்பட்ட நெடுவாசல் சாலையில் விலங்களுக்கான தங்குமிடம் கட்டிடம் (ABC) கட்டும் பணி</td><td rowspan="2">46.00</td><td>S. ரெங்கசாமி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.05%</td><td rowspan="2">குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த S. ரெங்கசாமி மதிப்பீட்டினை</td></tr>
<tr><td>M/s. TCB Construction ஒப்பந்ததாரர் பெரம்பலூர்</td></tr>
</table>
மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.1084/2026/இ1</td>
<td>தீர்மான எண். 1147 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>25.06.2026</td>
<td>பொருள் 19 :- இந்நகராட்சியின் பொது நிதி 2025 - 2026 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படியான பணிகளுக்கு 11.03.2026 ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td colspan="5">பொது நிதி – 2025 - 2026</td></tr>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விவரம்</th><th>மதிப்பீடு தொகை (இலட்சம்)</th><th>வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">பெரம்பலூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Quality மற்றும் Quantity Monitering செய்வதற்கு OCEMS இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட இயந்திரத்திலிருந்து அதன் அளவீடுகள் எடுக்கப்பட்டு மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு (CPCB) அனுப்பப்படவேண்டும். எனவே, ஏற்கனவே பொருத்தப்பட்ட OCEMS இயந்திரத்தினை சரி செய்து சரியான அளவீடு எடுக்க பணிகள் மேற்கொள்ளவும், மேலும் 3 (மூன்று) ஆண்டுகளுக்கு பராமரிப்பு செய்யும்</td><td rowspan="2">35.40</td><td>M/s. RK Enviro Care (-) 0.07% மதிப்பீட்டிற்கு</td><td rowspan="2">குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s. RK Enviro Care மதிப்பீட்டினை ஏற்கலாம்</td></tr>
<tr><td>IDEATEC SOFTWARES (INDIA) PVT LTD 0.11% மதிப்பீட்டிற்கு அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s. RK Enviro Care என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு : மன்றம்அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.5137/2024/இ1</td>
<td>தீர்மான எண். 1148 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>25.06.2026</td>
<td>பொருள் 20 :- இந்நகராட்சியில் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற திரு.மூ.குஞ்சு (தூய்மை பணியாளர்) அவர்களுக்கு சிறப்பு சேமநல நிதி திட்டத்தின் கீழ் பணியாளர்களால் செலுத்தப்பட்ட சந்தா மற்றும் வட்டித்தொகைகளை கணக்கீட்டு அரசு கருவூலம் மூலம் அளிக்கப்பட வேண்டியுள்ளது.தற்போது திரு. மூ.குஞ்சு (தூய்மை பணியாளர்) அவர்களின் நிர்வாக பங்கு தொகை ரூ.10000/- வீதம் அளிக்கப்பட வேண்டியுள்ளது.
<table>
<tr><td>வ.எண்</td><td>பணியாளர் பெயர் மற்றும் பதவி</td><td>ஓய்வு பெற்ற நாள்</td><td>தொகை</td></tr>
<tr><td>1.</td><td>திரு.மூ.குஞ்சு (தூய்மை பணியாளர்)</td><td>30.06.2023</td><td>ரூ10000</td></tr>
<tr><td></td><td></td><td>மொத்தம்</td><td>ரூ.10000/-</td></tr>
</table>
எனவே , மேற்காணும் பணியாளருக்கு நிர்வாக பங்குத்தொகை ரூ. 10000/- ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலககுறிப்பு:மன்றம்அனுமதிக்கலாம் ந.க.எண். 5367 /2025/பி3</td>
<td>தீர்மான எண். 1149 அனுமதிக்க ப்பட்டது</td>
</tr>
<tr>
<td>25.06.2026</td>
<td>பொருள் 21 :- இந்நகராட்சியில் குடிநீர் விநியோக பணிக்கு 38 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்படி ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி காலம் 30.06.2026 –ல் முடிவடைய உள்ளதை தொடர்ந்து மேற்படி ஒப்பந்ததாரரின் 01.06.2026–ம் தேதிய கடிதத்தில் மேலும் ஆறு மாதங்களுக்கு பணியாளர்களை வழங்கிடவும் ஏற்கனவே வழங்கப்பட்ட அதே விலைவிகிதம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கிட சம்மதம் தெரிவித்து ஒப்பந்ததாரர் திருமதி எஸ். ஜெயந்தி என்பவர் கடிதம் சமர்பித்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து குடிநீர் விநியோக பணிக்கு 38 பணியாளர்களை 01.07.2026 முதல் 31.12.2026 முடிய மேலும் 6 மாதங்களுக்கு பணியாளர்களை வழங்கிட அனுமதிக்கும் இதற்கான தோராய செலவினம் ரூ.40.00 இலட்சத்தை வருவாய் நிதி அல்லது குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>
ந.க.எண்.3366/2023/ இ1</td>
<td>தீர்மான எண். 1150 அனுமதிக்க ப்பட்டது</td>
</tr>
<tr>
<td>25.06.2026</td>
<td>பொருள் 22 :- பெரம்பலூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் அமுல்படுத்தப்பட்டு செயல்பட்டு வரும் நிலையில் விடுபட்ட மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 404/2020 நாள் 29.10.2020-ல் VB Associates Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு 06.01.2023-ல் 3 ஆண்டுகளுக்கு பாரமரிப்பு பணிகள் முடிவடைந்துவிட்டதை தொடர்ந்து பின்னர் ஒவ்வொரு ஆறுமாத காலத்திற்கும் நீட்டிப்பு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி காலம் 30.06.2026 ல் முடிவடைவதால் மேலும் 6 மாத காலத்திற்க்கு 01.07.2026 முதல் 31.12.2026 வரை நீட்டிப்பு செய்யதுதர கோரியும் ஏற்கனவே வழங்கப்பட்ட விலைவிகிதம் மற்றும் அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டு பணிகள் மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து VB Associates Chennai என்ற நிறுவனத்தின் மூலம் 01.06.2026 அன்று விண்ணப்பம் சமர்பிக்கப்பட்டுள்ளது. எனவே மன்றத்தின் அனுமதிக்கும் இப்பணிக்கான செலவினம் தோராயமாக ரூ.15.00 இலட்சம் மட்டும் பாதாள சாக்கடை அல்லது பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>
அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>
ந.க.எண். 9054 /2017/ இ1</td>
<td>தீர்மான எண். 1151 அனுமதிக்க ப்பட்டது</td>
</tr>
<tr>
<td>25.06.2026</td>
<td>பொருள்23 :- பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களுக்கு வெறிநோய் தடுப்பு மற்றும் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த நாய்கள் பிடிப்பதற்கு தேவையான வலைகள் வாங்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.90,000/- இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலா<br>
ந.க.எண். 2268/2025/H1</td>
<td>தீர்மான எண். 1152 அனுமதிக்க ப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 25.06.2026 | **பொருள் 24 :-** இந்நகராட்சியின் பொதுநிதி 2025-2026 ஆம் ஆண்டு நிதியிலிருந்து பெரம்பலூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு 4 எண்ணிக்கையில் புற்கள் வெட்டும் இயந்திரம் (**Honda Bursh Cutter**) விநியோகம் செய்யும் பணிக்கு **05.12.2025** ஆம் தேதியன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><table><tr><td>வ.எ</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>விலைப்புள்ளி</td></tr><tr><td>1.</td><td>நீயூ சேலம் மெசினரிஸ் மார்ட் குறைந்த</td><td>ரூ. 134000 /-</td></tr><tr><td>2.</td><td>ஹக்கீம் ஸ்டோர் கூடுதல் விலைப்புள்ளி</td><td>ரூ. 142000 /-</td></tr><tr><td>3.</td><td>மாடன் டூல்ஸ் கூடுதல் விலைப்புள்ளி</td><td>ரூ. 140000 /-</td></tr></table>**அலுவலக குறிப்பு:-**<br>1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரூ. 134000/. அளித்த நீயூ சேலம் மெசினரிஸ் மார்ட் வழங்கிய விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை ஏற்க வேண்டி பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>3. நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி நிறுவத்திற்கு தொகையினை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 7742/2025 /H1** | தீர்மான எண். 1153 அனுமதிக்க ப்பட்டது |
| 25.06.2026 | **பொருள் 25 :-** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.4,00,000/- இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2268/2025 /H1** | தீர்மான எண். 1154 அனுமதிக்க ப்பட்டது |
| 25.06.2026 | **பொருள் 26 :-** பெரம்பலூர் நகராட்சி பொதுசுகாதார உபயோகத்திற்கு தேவையான சுண்ணாம்பு நீர், பிளிச்சிங் பவுடர், ஆசிட், மற்றும் வெள்ளை பினாயில் வாங்க உத்தேச செலவினம் **ரூ.7,00,000/-** இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 1643/2025 /H1** | தீர்மான எண். 1155 அனுமதிக்க ப்பட்டது |
| 25.06.2026 | **பொருள் 27 :-** பெரம்பலூர் நகராட்சி பொதுசுகாதார பணியான டெங்கு கொசுப்புழு ஒழப்பு பணிக்கு தேவையான பைரத்திரம் 2% Extract, மற்றும் டெமிபாஸ் மருந்து வாங்கி கொசுஒழிப்பு பணிக்கு பயன்படுத்திக்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**6,00,000/-** இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:-மன்றம்அனுமதிக்கலாம்.**<br>**ந.க.எண். 3264/2024 /H1** | தீர்மான எண்.1156 அனுமதிக்க ப்பட்டது |
| 25.06.2026 | **பொருள் 28 :-** பெரம்பலூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளை வெளிக் கொணர்வு முகமை(OUTSOURCING) ஒப்பந்த அடிப்படையில் இறுதியாக இந்நகர்மன்ற தீர்மானம் எண். 923 நாள். 22.05.2025 ல் 1,07.2025 முதல் 14.05.2026 முடிய நீட்டித்து வழங்கிட அனுமதி அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வந்த நிலையில் இவ்வலுவலக ந.க.எண்.5600/2023/எச்1 நாள்.10.03.2026 ன் படி 30.06.2026 வரை நீட்டிக்கப்பட்டது.இந்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் Efile No.DMA/1196/2026/DT.2.06.2026ன் கடித்த்தில் 01.07.2026 முதல் 31.8.2026 முடிய இரண்டு மாதங்களுக்கு கால நீட்டிப்பு வழங்கிட கேட்டுக்கொள்ளப்பட்டது.<br>மேற்கண்ட பணிக்கு, 15.05.2026 முதல் 30.06.2026 வரை 47 | தீர்மான எண். 1157 அனுமதிக்க ப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>நாட்களுக்கும் மற்றும் 01.07.2026 முதல் 31.08.2026 முடிய இரண்டு மாத காலத்திற்கும் கால நீட்டிப்பு செய்ய மதிப்பீடு தொகை (Tender Rate 6805.32 x 16.34 tone = 111199.00 per day rate ) (111199 x 109 days = 121,20,691) அதாவது ரூ.122.00 இலட்சம் ஆகும்.<br>அதன்படி திருமதி. ஜெயந்தி நிறுவனத்திற்கு திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளை மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.122.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>மேற்கண்ட பணிக்கு 15.05.2026 முதல் 30.06.2026 வரை 47 நாட்களுக்கும் மற்றும் 01.07.2026 முதல் 31.08.2026 முடிய இரண்டு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்ய மதிப்பீடு தொகை (Tender Rate 6805.32 x 16.34 tone = 111199.00 per day rate ) (1,11,199 x 109 days = 121,20,691) அதாவது ரூ.122.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றம்அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.5600/2023/எச்1</td>
<td></td>
</tr>
<tr>
<td>25.06.2026</td>
<td>பொருள் 29 :- பெரம்பலூர் நகராட்சி 2025-2026 ஆம் ஆண்டு நிதியாண்டிற்கான வரவு செலவு விவரங்களை தணிக்கை செய்திட எஸ்.சாலாம்பாள், தனியார் நிதி ஆலோசகர் மூலம் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் .
<table>
<tr><th>S.NO</th><th>Description</th></tr>
<tr><td>1.</td><td>Preparation and Data Entry work for consolidated trail Balance for the Annual Account for year 2025-2026</td></tr>
<tr><td>2.</td><td>Preparation and data Entry work for consolidated Income and Expenditures &Balance sheet Account for the year</td></tr>
<tr><td>3.</td><td>Preparation of Consolidated Account Annexure for Year 2025-2026</td></tr>
</table>
எனவே, மேற்கண்ட பணிகளை UTIS ல் பதிவேற்றம் செய்து 2025–2026–ம் நிதியாண்டு கணக்கினை முடித்து உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறைக்கு அனுப்பி வைத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,10,000/–(ரூபாய் ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபாய் மட்டும்) இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். /2024/பி1</td>
<td>தீர்மான எண்.1158 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>25.06.2026</td>
<td>பொருள்30:- இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் இலகுரக / கனரக வாகனங்கள் பயன்படுத்தப்படுகிறது. அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் 3 எண்ணிக்கை ( TN 46 T 7617 , TN 46 T 3929, TN 46 AB 9292) குடிநீர் டேங்கர் லாரி –2 (TN 46 J 7292, TN46 K 0021 ) தெருவிளக்கு பராமரிப்பு பணி ஏணி வாகனம் TN 46 P 8533 பாதாள சாக்கடை அடைப்பு நீக்கும் வாகனம் TN46 Q 8712 மற்றும் JCB வாகனம் TN 46 AD 8740 ஆகிய எட்டு எண்ணிக்கை வாகனங்களுக்கு வாகனங்கள் பழுது நீக்கம் செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 2026-2027 ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ. 6.00 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2508/2025/இ1</td>
<td>தீர்மான எண். 1159 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **25.06.2026** | **பொருள் 31 :- பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்மா உணவகத்தில் தரைதளம் Iron Sheet Roof, Steam Generator Ceiling fan, மற்றும் Tube light பழுதடைந்து இருப்பதால் அதனை சரி செய்யும் பணிக்கு ரூ. 6.35 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்**<br>ந.க.எண். /2025/இ1 | தீர்மான எண். 1160 அனுமதிக்கப்பட்டது |
| **25.06.2026** | **பொருள் 32 :-** பெரம்பலூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் **4.20** MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை பராமரிப்பு செய்யும் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் **404/2020** நாள் 29.10.2020-**ல்** VB Associates Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு 06.01.2023-ல் **3** ஆண்டுகளுக்கு பாரமரிப்பு பணிகள் முடிவடைந்துவிட்டதை தொடர்ந்து பின்னர் ஒவ்வொரு ஆறுமாத காலத்திற்கும் நீட்டிப்பு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி காலம் 30.06.2026 ல் முடிவடைவதால் மேலும் **6** மாத காலத்திற்க்கு 01.07.2026 முதல் **31.12.2026** வரை நீட்டிப்பு செய்யதுதர கோரியும் ஏற்கனவே வழங்கப்பட்ட விலைவிகிதம் மற்றும் அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டு பணிகள் மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து VB Associates Chennai என்ற நிறுவனத்தின் மூலம் **01.06.2026** அன்று விண்ணப்பம் சமர்பிக்கப்பட்டுள்ளது. எனவே மன்றத்தின்அனுமதிக்கும் இப்பணிக்கான செலவினம் தோராயமாக ரூ.13.00 இலட்சம் மட்டும் பாதாள சாக்கடை அல்லது பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம்அனுமதிவழங்கலாம்.<br>**ந.க.எண்.12973/2018/ இ1** | தீர்மான எண். 1161 அனுமதிக்கப்பட்டது |
| **25.06.2026** | **பொருள் 33 :-** பெரம்பலூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் அமுல்படுத்தப்பட்டு செயல்பட்டு வரும் நிலையில் கழிவுநீர் நீரேற்று நிலையங்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 246/2020 நாள் 07.01.2020 ல் VB Associates Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு **3** ஆண்டுகளுக்கு பாரமரிப்பு பணிகள் முடிவடைந்துவிட்டதை தொடர்ந்து பின்னர் ஒவ்வொரு ஆறுமாத காலத்திற்கும் ஒப்பந்த பணிகாலம் நீட்டிப்பு செய்யப்பட்டு கடைசியாக 07.07.2025 முதல் **6** மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது மேற்படி அனுமதி காலம் **30.06.2026** ல் முடிவடைவதால் மேலும் **6** மாத காலத்திற்க்கு 01.07.2026 முதல் முதல் **31.12.2026** வரை நீட்டிப்பு செய்யதுதர கோரியும் ஏற்கனவே வழங்கப்பட்ட விலைவிகிதம் மற்றும் அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டு பணிகள் மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து VB Associates Chennai என்ற நிறுவனத்தின் மூலம் **01.06.2026** அன்று விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. எனவே மன்றத்தின் அனுமதிக்கும் இப்பணிக்கான செலவினம் ரூ. 40.00 இலட்சம் மட்டும் பாதாள சாக்கடை அல்லது பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.0057 /2020/ இ1 | தீர்மான எண். 1162 அனுமதிக்கப்பட்டது |

**25.06.2026**

**பொருள் 34 :-** இந்நகராட்சியின் வரி மற்றும் வரியில்லா இனங்களில் வசூல் பணியினை தீவிரப்படுத்த வேண்டுமெனவும் வசூல் பணியில் 100 சதவீதம் இலக்கீட்டினை எய்த வேண்டுமெனவும், சொத்துவரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம், மற்றும் கடை வாடகை இதர வரிஇனங்கள் அனைத்தையும் நகராட்சி அலுவலகத்தில் செலுத்த கோரி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான ஒலிப்பெருக்கி வைத்து ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யும் பணிக்கு 09.12.2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்ட மூன்று நிறுவனங்கள் அளித்துள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருள் விபரம் | JO Travels, Lakshmi Hospital Oppsite, Perambalur | Seven Star Travels, Mathanagopalapuram, Perambalur | Kolanji Travels, Rover Arch Road, Perambalur |
|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம், மற்றும் கடை வாடகை இதர வரிஇனங்கள் அனைத்தையும் நகராட்சி அலுவலகத்தில் செலுத்த கோரி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான ஒலிப்பெருக்கி வைத்து ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யும் பணிக்கு | 3600/- | 3000/- | 3500/- |

மேற்கண்ட பணிக்கு 09.12.2025 பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் Seven Star Travels, Mathanagopalapuram, Perambalur என்ற நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:-**

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3339/2025/அ1**

தீர்மான எண். 1163 அனுமதிக்கப்பட்டது

**25.06.2026**

**பொருள் 35 :-** இந்நகராட்சியின் பொது நிதி 2026-2027 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்க்கண்ட விபரப்படி பணிகளுக்கு 12.06.2026 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| 2026 - 2027 பொது நிதி | | | | |
|---|---|---|---|---|
| **வ. எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (இலட்சம்)** | **வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்** |
| 1 | பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை அருகில் உள்ள அம்மா உணவகத்தில் பராமரிப்பு செய்யும் பணிகள் | **3.15/-** | E- Solution , ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.18% மதிப்பீட்டிற்கு<br>R. சுதாகர் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.72 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த E- Solution , பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள E Solutions, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலககுறிப்பு :மன்றம் அனுமதிக்கலாம்.**

ந.க.எண்.2443/2026/இ1

தீர்மான எண். 1164 அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 25.06.2026 | **பொருள்36:-**பெரம்பலூர் நகராட்சியில் கலைஞர் நகர்புறமேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் இருசக்கர வாகன நிறுத்துமிடம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இருசக்கர வாகன நிறுத்துமிடத்தை 53 X 6 மீட்டர் நீளத்திற்கு விரிவாக்கம் செய்யும் பணிக்கு ரூ.18.00 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1165 அனுமதிக்க ப்பட்டது |
| 25.06.2026 | **பொருள் 37 :-** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 ல் உள்ள சாமி பிறந்த இடத்தின் அருகே பொதுமக்கள் குடிநீரை பயன்படுத்தும் பொருட்டு புதியதாக 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சிமெண்ட் தொட்டி அமைத்து அதனை சுற்றி பிளாட்பார்ம் மற்றும் பைப்லைன் வசதி அமைக்கும் பணிக்கு ரூ. 4.00 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1166 அனுமதிக்க ப்பட்டது |
| 25.06.2026 | **பொருள் 38 :-** பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் இன்டர்நெட் ஒயர்கள் அடிக்கடி பழுது ஏற்படுவதால் அலுவலக பணியில் சுனக்கம் ஏற்படுகிறது. அலுவலக வேலைகளை தங்கு தடையின்றி செய்வதற்கு இன்டர்நெட் ஒயர்களை புதியதாக மாற்றும் பணிக்கு ரூ. 0.70 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2026/இ1 | தீர்மான எண். 1167 அனுமதிக்க ப்பட்டது |
| 25.06.2026 | **பொருள் 39 :-** தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) இன் அத்தியாயம் X–A, பிரிவு 199, அத்தியாயம் XI ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, பெரம்பலூர் நகராட்சி மன்ற அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ள கழிப்பறைகள் மற்றும் நச்சு தொட்டிகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பை ஒழுங்குபடுத்துவதற்காக கசடு கழிவு மேலாண்மை துணை விதிகள் (திருத்தம்) 2024 உருவாக்கப்பட்டுள்ளது. இந்த துணை விதிகள், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் அத்தியாயம் XI– பகுதி IV ", 2019 ஆம் ஆண்டின் "தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள்" மற்றும் அவ்வப்போது அரசாங்கத்தால் அறிவிக்கப்படும் பிற தொடர்புடைய விதிகள் மற்றும் உத்தரவுகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்பட வேண்டும்.<br>இந்த 2024 துணை விதிகளும் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.**2811/2026 /H1** | தீர்மான எண். 1168 அனுமதிக்க ப்பட்டது |

25.06.2026

**பொருள் 40:-** பெரம்பலூர் நகராட்சி ஆணையாளர் அறை, பொறியாளார் அறை, நகர்மன்ற தலைவர் அறை மற்றும் நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அறிவுசார் மையத்திற்கும் தினசரி செய்தி தாள்கள் விநியோகம் செய்தமைக்கு ஏப்ரல் 2023 முதல் நவம்பர் 2025 வரை கீழ்கண்டவாறு செய்தி தாள் நியூஸ் ஏஜென்ட் நிறுவனத்திடமிருந்து பட்டியல்கள் வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்** | **செய்தி தாள் ஏஜென்ட் நிறுவனம்** | **செய்தி தாள் விபரம்** | **வழங்கப்பட்ட மாதம்** | **பட்டியல் தொகை ரூ.** |
|---|---|---|---|---|
| 1 | திரு, R. சுதாகர் , ராஜமங்கைை நியூஸ் ஏஜென்ட் | தினமணி (ம) தினமலர் | ஏப்ரல் 2023 முதல் நவம்பர் 2025 வரை | 13090 |
| 2 | திரு, M.B ஹிதயாத்துல்லாஹ் , நியூஸ் ஏஎஜன்ட் | தினமணி | பிப்ரவரி 2024 முதல் நவம்பர் 2025 வரை | 18780 |
| 3 | திரு. P. பழனிசாமி, நியூஸ் ஏஜென்ட் | இந்துதமிழ் மற்றும் இந்து ஆங்கலம் பேப்பர் | மார்ச் 2024 முதல் நவம்பர் 2025 வரை | 9820 |
| 4 | திரு. P. பழனிசாமி, நியூஸ் ஏஜென்ட் | தினதந்தி மற்றும் தினகரன் | ஏப்ரல் 2023 முதல் நவம்பர் 2025 வரை | 28520 |
| | | | | 70210 |

எனவே, மேற்கண்டவாறு ஏப்ரல் 2023 முதல் நவம்பர் 2025 வரை செய்திதாள் விநியோகம் செய்தமைக்கான மொத்த பட்டியல் தொகையும் மற்றும் டிசம்பர்–2025 முதல் மே –2026 வரை மேற்கண்ட செய்தி தாள் ஏஜென்ட்களிடம் இருந்து பட்டியல் பெற்று தொகை வழங்கிடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

ந.க.எண்.8366/2026/இ1

தீர்மான எண். 1169 அனுமதிக்கப்பட்டது

25.06.2026

**பொருள் 41:-** மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் அவர்கள் 12.03.2026 அன்று பெரம்பலூர் நகருக்கு வருகைதந்ததை தொடர்ந்து இந்நகராட்சியில் நடைபெறும் திட்டபணிகள் விபரத்தினை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் விளம்பரம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க கீழ்கண்ட நாளிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளதற்கு விளம்பர கட்டணம் செலுத்த கோரி சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களிலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்** | **நாளிதழ்** | **விளம்பரம் செய்யப்பட்ட விபரம்** | **விளம்பரம் கட்டணம் தொகை** |
|---|---|---|---|
| 1 | மாலை தமிழகம் | திட்ட பணிகளின் விபரம் | ரூ.23100/– |
| 2 | அமர் மீடியா (தினமலர்) | திட்ட பணிகளின் விபரம் | ரூ.36120/– |
| 3 | தினகரன் | திட்ட பணிகளின் விபரம் | ரூ.32224/– |
| 4 | தினத்தந்தி | திட்ட பணிகளின் விபரம் | ரூ.32550/– |
| 5 | மாலை முரசு | திட்ட பணிகளின் விபரம் | ரூ.16406/– |
| | **மொத்தம்** | | **ரூ.1,40,400/–** |

எனவே,மேற்காணும் நாளிதழ்களுக்கு விளம்பர கட்டணம் ரூ.1,40,400/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3026/2024/இ1

தீர்மான எண். 1170 அனுமதிக்கப்பட்டது

//ஒம்//திருமதி.மா.அம்பிகா
நகர்மன்றதலைவர்
பெரம்பலூர் நகராட்சி

// **உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**பெரம்பலூர் நகராட்சி**